Registered as a News Paper  பக்கங்கள் 06  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 03  திருவள்ளுவர் ஆண்டு 2024  தை 27  [ 09 - 02 - 1993 ]  செவ்வாய்க்கிழமை  ஓசை 357

## அதிபர்களுக்கு அதிகரித்த படி ஜனவரி முதல் வழங்க பணிப்பு

பாடசாலை அதிபர்களுக்கான அதிகரிக்கப்பட்டுள்ள அதிபர் படியை (அலவன்ஸ் 01-1-93-ல் இருந்து வழங்கு மாறு யாழ் கல்வித் திணைக்கள கணக்காளர் யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான நிதி உதவி யாளர்களுக்கும் கடிதம் மூலம் பணித்துள்ளார். தேசிய பாடசாலை அதிபர்களுக்கு ரூபா 375 00-ம், 1 ஏ, பி, சி பாடசாலை அதிபர்களுக்கு ரூபா 300-00 2-ம் தரபாடசாலை அதிபர்களுக்கு ரூபா 225-00-ம் [6 ஆம் பக்கம் பார்க்க]

# கேரதீவு - சங்குப்பிட்டி பாதை திறப்பதுபற்றி இன்னும் முடிவில்லை

## படையினரிடம் சிக்கிய வாகனங்களை தர மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் சிக்கியுள்ள வாகனங்களை உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது பற்றி சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் கவலை தெரிவித்தார்

1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பூநகரிப் பகுதியை திடீரென ஆக்கிரமித்து அங்கு நிலைகொண்டபோது இந்த லொறிகள் இராணுவத்திடம் சிக்கிக் கொண்டமை தெரிந்ததே.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது தென்பகுதியிலிருந்து யாழ். குடாநாட்டிற்குத் தேவையான பல கோடி ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் வந்து பூநகரிப் பகுதியில் தரித்து நின்ற 50 ற்கும் மேற்பட்ட லொறிகளும், டிராக்டர்களுமே இராணுவத்தின் பிடிகளுள் சிக்கின. இவற்றை மீட்பதற்காக சகல வழிகளிலும் கப்பட்டு பல மகஜர்கள் அனுப்பப்பட்டன யாழ். அரசாங்க அதிபரும் கொழும்பு செல்லும் சந்தர்ப்பங்களில் கூட்டுப் படைத் தலைமையகத்துட [6 ஆம் பக்கம் பார்க்க]

## ராணுவம் வாபஸ்பெறத் தயக்கம் கொழும்பு பேச்சுக்கள் தொடர்கிறது

(கொழும்பு)

கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிப்பது பற்றி இன்னும் இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகின்றது. இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் இப் பேச்சுவார்த்தையில், இப் பாதையில் நிலைகொண்டுள்ள இராணுவம் வாபஸ் பெறுவது பற்றியும், பாதை திறக்கப்படும் வேளையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றியும் பேச்சுக்கள் இடம்பெறுவதாகவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

மேற்படி போக்குவரத்துப் பாதையை பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவிடுவது என அரசாங்கம் அறிவித்துள்ள வேளையிலும் இப்பாதையை பயன்படுத்துவதில் உள்ள நடைமுறை விடயங்கள் குறித்து இதுவரை முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை இவ்வாறான நடைமுறை விடயங்களில் அரசுக்கும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளுக்குமிடையிலான முரண்பாடுகளை நீக்கும் முகமாக தொடர்ந்தும் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் ஐக்கியநாடுகள் சபையின் தூதரக உயர் அதிகாரிகளும், அரச உயர் அதிகாரிகளுடன் சில இராணுவ அதிகாரிகளும் கலந்து கொள்வதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

அடுத்து அரச அதிகாரிகளுக்கும், அகதிகளுக்கான ஐக்கிய [6 ஆம் பக்கம் பார்க்க]

## களுத்துறை சிறையிலிருந்து 15 பேர் விடுதலையாவர்

(யாழ்ப்பாணம்)

களுத்துறை சிறையில் சிறிலங்கா அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 15 தமிழ்க் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் கொழும்பில் இருந்து மிக விரைவில் பருத்தித்

களுத்துறை சிறைச்சாலைகளில் சிறிலங்கா அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 35 தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தது இதில் பனாவியில் இருந்து 20 தமிழ்க் கைதிகள் கடந்த 6ஆ

## யாழ். வைத்தியசாலையில் தாதிகள் வெளிநடப்பு

[நமது நிருபர்]

யாழ் போதனா வைத்திய

யில் மருந்துப் பெட்டி ஒன்று காணாமல் போனது தொடர்

## இரு கப்பல்களில் அத்தியாவசிய பொருள்கள்

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் இரு கப்பல்கள் விரைவில் யாழ். குடாநாட்டை நோக்கி புறப்பட இருக்கிறன.

சுமார் 1500 மெற்றிக் தொன் அரிசியுடன் "வெனிலால்" என்ற கப்பலும் அரிசி, மா, சீனி, தானியங்கள், உரம், 245 பீப்பா மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு "குமாரி" என்ற கப்பலும் குடா நாட்டைநோக்கிப் புறப்படவுள்ளன. இப்பொருள்கள் மேற்படி கப்பல்களில் தற்பொழுது ஏற்றப்பட்டு வருகின்றன.

## படையினரிடம் சிக்கிய வாகனங்களை தர மறுப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் சிக்கியுள்ள வாகனங்களை உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது பற்றி சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பதாக யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் கவலை தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பூநகரிப் பகுதியைத் திடீரென ஆக்கிரமித்து அங்கு நிலைகொண்டபோது இந்த லொறிகள் இராணுவத்திடம் சிக்கிக் கொண்டமை தெரிந்ததே.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது தென்பகுதியிலிருந்து யாழ். குடாநாட்டிற்குத் தேவையான பல கோடி ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் வந்து பூநகரிப் பகுதியில் தரித்து நின்ற 50 க்கும் மேற்பட்ட லொறிகளும், டிராக்டர்களுமே இராணுவத்தின் பிடிகளுள் சிக்கின. இவற்றை மீட்பதற்காக சகல் அமைக்கப்பட்டு பல மகஜர்கள் அனுப்பப்பட்டன யாழ். அரசாங்க அதிபரும் கொழும்பு செல்லும் சந்தர்ப்பங்களில் கூட்டுப் படைத் தலைமையகத்துட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ராணுவம் வாபஸ்பெறத் தயக்கம்
# கொழும்பு பேச்சுக்கள் தொடர்கிறது

(கொழும்பு)

கேரதிவு-சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிப்பது பற்றி இன்னும் இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகின்றது. இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் இப் பேச்சுவார்த்தையில், இப் பாதையில் நிலைகொண்டுள்ள இராணுவம் வாபஸ் பெறுவது பற்றியும், பாதை திறக்கப்படும் வேளையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றியும் பேச்சுக்கள் இடம்பெறுவதாகவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

மேற்படி போக்கு வரத்துப் பாதையை பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விடுவது என அரசாங்கம் அறிவித்துள்ள வேளையிலும் இப் பாதையை பயன்படுத்துவதில் உள்ள நடைமுறை விடயங்கள் குறித்து இதுவரை முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை இவ்வாறான நடைமுறை விடயங்களில் அரசுக்கும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளுக்குமிடையிலான முரண்பாடுகளை நீக்கும் முகமாக தொடர்ந்தும் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் ஐக்கியநாடுகள் சபையின் தூதரக உயர் அதிகாரிகளும், அரச உயர் அதிகாரிகளுடன் சில இராணுவ அதிகாரிகளும் கலந்து கொள்வதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

அடுத்து அரச அதிகாரிகளுக்கும், அகதிகளுக்கான ஐக்கிய

[6 ம் பக்கம் பார்க்க]

## களுத்துறை சிறையிலிருந்து 15 பேர் விடுதலையாவர்

(யாழ்ப்பாணம்)

களுத்துறை சிறையில் சிறிலங்கா அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 15 தமிழ்க் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் கொழும்பில் இருந்து மிக விரைவில் பருத்தித்துறையை வந்தடையவுள்ள "குமாரி" கப்பலிலேயே இவர்கள் ஏற்றிவரப்படலாமெனவும் ஊர்ஜிதமற்ற செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஏற்கனவே பலாலி மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் சிறிலங்கா அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 35 தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தது இதில் பலாலியில் இருந்து 20 தமிழ்க் கைதிகள் கடந்த 6ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் மிகுதி 15 தமிழ்க்கைதிகளே களுத்துறை சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்படவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

## யாழ். வைத்தியசாலையில் தாதிகள் வெளிநடப்பு

[நமது நிருபர்]

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று நிர்வாகத்திற்கு எதிராக தாதிகள் சில மணி நேரம் வெளிநடப்புச் செய்தனர்.

போதனா வைத்தியசாலையில் மருந்துப் பெட்டி ஒன்று காணாமல் போனது தொடர்பாக நிர்வாகம் வழங்கிய தீர்ப்பினைக் கண்டிக்கும் முகமாகவே தாதிகள் வெளிநடப்புச் செய்தனர். இதனால் சிலமணி நேரம் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; கடந்த வாரம் பெண் பரிசாரகரால் மருந்துக் களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து பெற்று வந்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இரு கப்பல்களில் அத்தியாவசிய பொருள்கள்

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் இரு கப்பல்கள் விரைவில் யாழ். குடாநாட்டை நோக்கி புறப்பட இருக்கிறன.

சுமார் 1500 மெற்றிக் தொன் அரிசியுடன் "மெரினால்" என்ற கப்பலும் அரிசி, மா, சீனி, தானியங்கள், உரம், 245 பீப்பா மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு "குமாரி" என்ற கப்பலும் குடா நாட்டைநோக்கிப் புறப்படவுள்ளன. இப்பொருள்கள் மேற்படி கப்பல்களில் தற்பொழுது ஏற்றப்பட்டு வருகின்றன.

## காங்கேசன்துறைமுகம் திறப்பது தாமதமாகலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு காங்கேசன்துறை துறைமுகத்தினூடாக உணவுப் பொருள்கள் எடுத்துவரும் முயற்சியில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இப்பாதையூடாக உணவு வாகனப் போக்கு வரத்துக்கள் குறித்து அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்கனவே உடன்பாடு ஏற்பட்டு விட்டது. இவ்விருதரப்பினரையும் சேர்த்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஒன்றிணைந்து ஒரு முத்தரப்பு

[6 ஆம் பக்கம் பார்க்க]

# இளாலியில் படகு மீது தாக்கு; இரண்டு படகுகள் எரிந்து நாசம்
## இரண்டைக் கடற்படை இழுத்துச் சென்றது

[யாழ்ப்பாணம்]

ஆலங்கேணியிலிருந்து இளாலி நோக்கி வந்துகொண்டிருந்த படகுகள் மீது நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா கடற்படையினர் பிரங்கி தாக்குதலை நடாத்தியுள்ளதாக தெரியவருகிறது

இத்தாக்குதலில் இரண்டு படகுகள் முற்றாக எரிந்து விட்டதாகவும் இரண்டு படகுகளை கடற்படையினர் கட்டி இழுத்துச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இப்படகுகளில் பயணம் செய்த ஒருவரைக் காணவில்லை எனவும் ஏனையோர் தப்பி வந்துவிட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது [நி]

## பொருளாதார தடையைக் கண்டித்து
# பிரதேச செயலகம் முன் பொதுஅமைப்புகள் மறியல்

[வடமராட்சி]

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பொருளாதார தடையைக் கண்டித்து பருத்தித்துறை பிரதேச செயலகம் முன் நேற்றுக் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை மறியல் போராட்டம் நடைபெற்றது.

இவ்வலுவலகத்தின் முன் சுழற்சி முறையில் இன்றிலிருந்து ஒவ்வொரு அமைப்புக்களும் பல கோரிக்கைகளை முன்வைத்து அடையாள மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளன.

அலுவலகத்திற்கு வந்த உத்தியோகஸ்தர்களை உள்ளே விடாமல் அலுவலக வாசலில் மறியல் போராட்டம் நடைபெற்றது. அலுவலகம் வந்த உத்தியோகஸ்தர்கள் கடமைசெய்ய முடியாமல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிதொடக்கம் 3.30 மணிவரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாட்களில் தமது மீட்பு நிதிகட்டணச் செலுத்தமுடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சி கடலில் கடற்படை அட்டகாசம்

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைக் கடற்பகுதியில் சிறிலங்காகடற்படையினரின் கெடுபிடியினால் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஏழு மீன்பிடி வலைகள் வெட்டப்பட்டு நாசமாக்கப்பட்டன. இரண்டு படகுகளில் சென்ற ஆறு மீனவர்கள் கடற்படையினரின் வேட்டுக்களின் மத்தியில் உயிர் பிழைத்தனர்

இச்சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் முனைப்பகுதியில் நடைபெற்றது.

இரண்டு படகுகளில் சென்ற அ. லண்டி (வயது38) மணியம் (வயது28) ச செல்வராசா (வயது17) ஆகியோர் ஒரு படகிலும் அ. பாலசிங்கம் (வயது40) பா. சுரேஸ் வயது 22) மி ராஜன் (வயது20 ஆகியோர் மற்றைய படகிலும் சென்று தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை துப்பாக்கி வேட்டுக்களை பிரயோகித்தவாறு நெருங்கிய கடற்படையினர் ஏழுமீன் பிடிவலைகளை வெட்டியதோடு. ஒரு படகையும் சேதமாக்கினர்.

[6ஆம் பக்கம் பார்க்க]

**உளவாளிகள் !!!**

**அவதானமாகஇருக்கவும்..!**

சந்தேகமாக ஏதும் இருப்பின் புலிகளிடம் கூறுங்கள்.

# வரி விளம்பரம்

## அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக் கூடு திருத்தும் வாடிக்கை யாளர்கட்கு மூன்று(3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனா மாக வழங்கப்படும். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வான வில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஒட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர் கள் ) (சி 5918)

## வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் காஸ்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி யாழ்ப்பா ணம். (சி-5924)

## 200 நாடகங்கள்

O/L தமிழ்மொழி பாடத் திட்டத்தில் வானொலி நாட கமும் உள்ளது. அதைக் கற் பதற்கு பயன்படக்கூடிய ஒரே யொரு நூல் — 200க்கும் அதிக மான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந சுந்தரம்பிள்ளை யின் முதலாம்பிள்ளை 30/- (4053)

# குளிர்த்தி உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம் பாள் தேவஸ்தான வருடாந் தக் குளிர்த்தி உற்சவம் இன்று காலை விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட் டுடன் இடம் பெறும்.

அடியார்களுக்குப் புது அரிசியில் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கப்படும். (24)

# நிர்வாகிகள் தெரிவு

அல்லாரை தெற்கு வஸ்மின் ச. ச. நிலையத்தின் வருடாந் தப் பொதுக் கூட்டம் அண் மையில் நிலைய முன்றலில் தலைவர் சி சத்தியானந்தலிங் கம் தலைமையில் நடைபெற் றது. நடப்பு வருட நிர்வாகி களாகத் தலைவர் ஆ செல்வ ரத்தினம், உப தலைவர்: வ. விவேகானந்தன், செயலாளர் மா. பிறைசூடி, உப செயலா ளர்: க. சிவகுமார், பொரு ளாளர், வ. யோகானந்தன் ஆகியோரும், 7 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(குருநகர்)

றெக்கிளமேசன் சன சமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 30 ஆம் திகதி கூடியபோது கீழ்க் கண்டோர் நடப்பு வருட நிர்வாகிகளா கத் தெரிவாகினர்.

தலைவர்: ம ஞானசீலன், உப தலைவர்: து மரியரெத் தினம், செயலாளர்: எஸ். என். ஜே. மரியாம்பிள்ளை, உப செயலாளர்: ம பெனற் கொன்ஸன்ரைன், பொருளா ளர்: எ. அன்ரன்.

விளையாட்டுப் பொறுப்பா ளர்: த. கொலின், சுகாதார சமூக சேவைக் குழுத் தலை வர்: வி இராசேந்திரம்,

நிர்வாக சபை உறுப்பினர் கள்: ம. இம்மானுவேல், ஆ. பரமதாஸ், இ மைக்கல், ம. அன்பழகன், ஆ இம்மானு வேல். (21, 17)

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவல கப் பகுதிக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக் கூட்டம் புலோலி பொது நூலக மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. வே. சிவசுப்பிரமணியதேவா தலை மையில் நடைபெற்றது. இச் சமாசத்தின் தலைவராக திரு. சு. திருச்செல்வமும், செயலா ளராக திரு. கண.சண்முக நாதனும், பொருளாளராக திரு ஞா. திருச்செல்வமும் தெரிவு செய்யப்பட்டனர்,

# மந்திகை வைத்தியசாலையில் மின் மாற்றி வயர்கள் திருட்டு

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்தி யசாலை வளவிலுள்ள மின்மா ற்றி [ரான்ஸ்போமர்] யில், பொருத்தப்பட்டிருந்த பெறு மதிமிக்க மின்சார வயர்களை திருடிய இளைஞர், ஆஸ்பத்திரி ஊழியர்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

இச் சம்பவம், கடந்த 4-ம் திகதி இரவு, மந்திகை வைத்தி யசாலை வளவில் நடைபெற் றது. இச்சம்பவம்தொடர்பாக மருதடி பருத்தித்துறையைச் சேர்ந்தகந்தசாமி (விக்கினேஸ் வரன்வயது28)எல்பவர் ஆஸ்ப த்திரிஊழியர்களால்மடக்கிப்பி டிக்கப்பட்டதாகவும்மற்றொரு வர் தேடப்படுவதாகவும் பரு த்தித்துறை காவல் துறையினர் இதுபற்றி விசாரணை மேற் கொண்டிருப்பதாகவும் கூற படுகின்றது

# மாவீரர் உருவப் படங்கள் பெற்றுக் கொள்ளலாம்

1. கப்டன் றெஜி, (சுப்பிரமணியம் மகேஸ்வரன்), ஆலடி, காரைநகர்.
2. மேஜர் அல்பேட், (கந்தையா ரூபநிதி), ரூபநிதி வீதி அச்சுவேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
3. லெப். காண்டீபன் எம். பி. (சுப்பிரமணியம் சிறீஸ்கந்த ராசா, 6ஆம் வட்டாரம், குமுழமுனை, மணலாறு.
4. வீரவேங்கை விவேகன், (முருகர் சிவனேஸ்வரன்), கண்டா வளை, பரந்தன்.
5. வீரவேங்கை சிவா, (சிவகுரு சிவேந்திரன்), அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், யாழ்ப்பாணம்.
6. லெப். கேணல் புலேந்திரன், (குணநாயகம் தர்மராஜா) பாலையூற்று, திருக்கோணமலை.
7. வீரவேங்கை விஜி, (குசைப்பிள்ளை றேமன், றெக்கிளாஸ்) தேனுகடயான், திருக்கேதீஸ்வரம், மன்னார்.
8. வீரவேங்கை தனபாலன், (தியாகராசா வரேந்திரன்) காரைநகர், யாழ்ப்பாணம்.
9. வீரவேங்கை ரகுமான், (அருளம்பலம் ரகுபதி). இரணை இலுப்பைக்குளம், வவுனியா.
10. வீரவேங்கை ரவி, (தம்பையா வாமதேவன்), மகிழடித் தீவு, மட்டக்களப்பு.
11. வீரவேங்கை குமா, (இரத்தினம் குமாரசாமி) கறுக்காததீவு - பூநகரி
12. வீரவேங்கை சாமி. (ஆறுமுகம் தவரத்தினம்) சாமிவீதி ஆவரங்கால், யாழ்ப்பாணம்.
13. வீரவேங்கை அசீஸ், (வாமலிங்கம் தவநேசன்) இடதுகரை, முத்தையன்கட்டு, முள்ளைத்தீவு.
14. லெப். கேணல் விக்ரர், (மருசலின் பியூஸ்லஸ்) பனங்கட்டிக்கொட்டு, மன்னார்
15. வீரவேங்கை ராஜ்மோகன்(சிவராமலிங்கம் ராஜ்மோகன்) ராஜ்மோகன் வீதி தும்பளை, பருத்தித்துறை.
16. வீரவேங்கை கமல் (அர்ச்சுனராசா நந்தகுமார்) பொலிகண்டி, வல்வெட்டித்துறை
17. லெப். ஜோசப் (கணபதிப்பிள்ளை நாகராசா) பொத்துவில் - 3 அம்பாறை
18. வீரவேங்கை அலெக்ஸ் - சின்னக்கண்ணாடி (வேதரத்தினம் மொறிஸ் றெஜினோல்ட்) 3/1, மொறிஸ்வீதி, கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம்
19. மேஜர் கணேஸ் (சித்திரவேல் சிற்றம்பலம்) 1-ம்படிவம், கந்தளாய், திருக்கோணமலை.
20. வீரவேங்கை விஸ்வம் (முத்துலிங்கம் கருணாநிதி) வன்னியர் வீதி, கல்முனை - 02, அம்பாறை
21. வீரவேங்கை ரசீந்தன், (பசுபதி சதீஸ்குமார்) அண்ணா சிலையடி, கரணவாய் தெற்கு கரவெட்டி யாழ்ப்பாணம்.

ஆகிய மாவீரர்களது உருவப்படங்கள் தேவையானோர் மாவீரர் பணிமனையில், அல்லது மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது.

# வடபகுதி தபால் விநியோகம்

[illegible] சீர்குலைப்பு

# நினைவு கூருகின்றோம்...

## 1993-2-9

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - பருத்தித் துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

மகேஸ்வரன்

1987 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இரா ணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின்போது விழுப் புண் அடைந்து, மருத்துவ மனைக்குக் கொண்டு வரு கையில் வீரச்சாவெய்திய -

ரகு [செல்லத்தம்பி யோகராசா - தாண்டியடி, திருக் கோயில் - அம்பாறை]

மன்னார் - இலுப்பைக்கடவைப் பகுதியில் சிறிலங் காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச் சில் வீரச்சாவெய்திய -

தங்கேஸ் [சந்தான் யோசப்பிள்ளை ஜெயக்குமார் - நறுவிலிக்குளம், வங்காலை - மன்னார்]

விஷ்ணு [சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை - நெடுங்கண்டல், அடம்பன் - மன்னார்]

1988 ஆம் ஆண்டு தேசவிரோதக் குழுவினர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ வ. சந்திரன்

அம்பாறை - தம்பிலுவில், முனையூர்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். நித்தி [ஆறுமுகம் கணேசமூர்த்தி - ஆலையடி வீதி, தம்பிலுவில்-02 - அம்பாறை]

மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் கைதாகி, ஓ'தாச்சிமடம் முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட -

2-ம் லெப். சினம் [அருளம்பலம் சிவஞானம் - களுதாவளை - மட்டு]

1989 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வளாகம் முன் இந்தியப் படையினர் எதிர்பாராத விதமாக மேற் கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் சிவா கடாபி [வீரையா சிவகுமார் - முள்ளி ஒழுங்கை, அரியாலை கிழக்கு - யாழ்.]

யாழ் - சாவகச்சேரி, கைதடிப் பகுதியில் தேசவிரோ தக் குழுவினரால் வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

சி. தெய்வேந்திரபாலன்-மென்டிஸ் (கைதடி மேற்கு, சாவகச்சேரி - யாழ்)

மன்னார் - வங்காலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு மட்டு - குறிஞ்சாமுனைப் பகுதி யில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற் கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கௌதீபன் [செல்வராசா சாந்தன் - பெரிய ஊறணி - மட்டு.]

# திருமண நன்றி நவிலல்

03-02-93 இல் நிகழ்ந்த எமது திருமணவைபவத்தில் கலந்து கொண்டு எமக்கு ஆசீர்வாதம் வழங்கியும், அன் பளிப்புக்கள் தந்தும் மகிழ்வித்த உறவினர்கள், நண்பர் கள், கலைஞர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கி றோம்.

பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி யாழ்ப்பாணம். (சி-5924)

## 200 நாடகங்கள்

O/L தமிழ்மொழி பாடத் திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது. அதைக் கற்பதற்கு பயன்படக்கூடிய ஒரேயொரு நூல் — 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் முதலாம்பின்னை 30/- (4053)

## குளிர்த்தி உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்தக் குளிர்த்தி உற்சவம் இன்று காலை விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம் பெறும்.

அடியார்களுக்குப் புது அரிசியில் கஞ்சிகாய்ச்சிக் கொடுக்கப்படும். (24)

வா. எ. அன்ரன்.

விளையாட்டுப் பொறுப்பாளர்: த. கொலின், சுகாதார சமூக சேவைக் குழுத் தலைவர்: வி. இராசேந்திரம்,

நிர்வாக சபை உறுப்பினர்கள்: ம. இம்மானுவேல், ஆ. பரமதாஸ், இ. மைக்கல், ம. அன்பழகன், ஆ. இம்மானுவேல். (21, 17)

❋ ❋ ❋

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலகப் பகுதிக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக் கூட்டம் புலோலி பொது நூலக மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச சபை புலோலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. வே. சிவசுப்பிரமணியதேவா தலைமையில் நடைபெற்றது. இச் சமாசத்தின் தலைவராக திரு. சு. திருச்செல்வமும், செயலாளராக திரு. கண.சண்முகநாதனும், பொருளாளராக திரு ஞா. திருச்செல்வமும் தெரிவு செய்யப்பட்டனர்,

பாலையூற்று, திருக்கோணமலை.

7. வீரவேங்கை விஜி, (குலசிங்கப்பிள்ளை றேமன், றெஜினோல்ட்) தேனுடையான், திருக்கேதீஸ்வரம், மன்னார்.
8. வீரவேங்கை தனபாலன், (தியாகராசா வரேந்திரன்) காரைநகர், யாழ்ப்பாணம்.
9. வீரவேங்கை ரகுமான், (அருளம்பலம் ரகுபதி), இரணை இலுப்பைக்குளம், வவுனியா.
10. வீரவேங்கை ரவி, (தம்பையா வாமதேவன்), மகிழடித்தீவு, மட்டக்களப்பு.
11. வீரவேங்கை குமா, (இரத்தினம் குமாரசாமி) கறுக்காத்தீவு - பூநகரி
12. வீரவேங்கை சாமி, (ஆறுமுகம் தவரத்தினம்) சாமிவீதி, ஆவரங்கால், யாழ்ப்பாணம்.
13. வீரவேங்கை ஆசீஸ், (சுரமலிங்கம் தவநேசன்) இடதுகரை, முத்தையன்கட்டு, முல்லைத்தீவு.
14. லெப். கேணல் விக்ரர், (மருசலின் பியூஸ்லஸ்) பனங்கட்டிக்கொட்டு, மன்னார்
15. வீரவேங்கை ராஜ்மோகன்(சிவராமலிங்கம் ராஜ்மோகன்) ராஜ்மோகன் வீதி, தும்பளை, பருத்தித்துறை.
16. வீரவேங்கை சுமன் (அர்ச்சுனராசா நந்தகுமார்) பொலிகண்டி, வல்வெட்டித்துறை
17. லெப். ஜோசப் (கணபதிப்பிள்ளை நாகராசா) பொத்துவில் - 3 அம்பாறை
18. வீரவேங்கை அலெக்ஸ் - சின்னக்கண்ணாடி (வேதரத்தினம் மொறிஸ் றெஜினோல்ட்) 3/1, மொறிஸ்வீதி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம்
19. மேஜர் கணேஸ் (சித்திரவேல் சிற்றம்பலம்) 1-ம்படிவம், கந்தளாய், திருக்கோணமலை.
20. வீரவேங்கை விஸ்வம் (முத்துலிங்கம் கருணாநிதி) வன்னியர் வீதி, கல்முனை - 02, அம்பாறை
21. வீரவேங்கை ரசீந்தன், (பசுபதி சதீஸ்குமார்) அண்ணா சிலையடி, கரணவாய் தெற்கு கரவெட்டி யாழ்ப்பாணம்.

ஆகிய மாவீரர்களது உருவப்படங்கள் தேவையானோர் மாவீரர் பணிமனையில், அல்லது மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடபகுதி தபால் விநியோகம் கூட்டுப்படையால் சீர்குலைப்பு

யாழ். குடாநாட்டு மக்களிற்கான தபால் விநியோகத்தைக் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் திட்டமிட்டு சீர்குலைத்து வருவதனால் யாழ் அரச திணைக்களங்களுக்கான தபால் விநியோகமும் சீர்குலைந்து வருகின்றது. இதனால் யாழ் குடாநாட்டில் அரச நிர்வாக சேவைகள் தொடர்ந்து பாதிப்புறுவதாகத் தெரிய வருகின்றது.

அரச அலுவலகங்களின் நாளாந்த அலுவல்கள் மற்றும் வாராந்த அலுவல்கள் சம்பந்தமாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுகின்ற கடிதங்கள் என்பன யாழ். குடாநாட்டிற்கான தபால் விநியோகம் சீரின்மையினால் கால தாமதமாகவே கிடைக்கப் பெறுகின்றன. இதனை அடுத்து யாழ். குடாநாட்டில் அரசநிர்வாகசேவைகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

## செயற்கைக்கால் அன்பளிப்பு

சமீபத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் கால்களை இழந்துள்ள 30 பேர்களுக்கு றெடபானா சிறுவர் பாதுகாப்பு நிதியம் செயற்கைக் கால்களை அன்பளிப்புச் செய்துள்ளதாக திட்ட இணைப்பாளர் திரு. ஏ. எஸ். சர்மா தெரிவித்தார். (21)

ளெண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ வ. சந்திரன்

அம்பாறை - தம்பிலுவில், முனையூர்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**2ம் லெப். நித்தி** [ஆறுமுகம் கணேசமூர்த்தி - ஆலையடி வீதி, தம்பிலுவில்- 02 - அம்பாறை]

மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் கைதாகி, ஓட்டமாவடி முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட -

**2-ம் லெப். சினம்** [அருளம்பலம் சிவஞானம் - களுதாவளை - மட்டு]

1989 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வளாகம் முன் இந்தியப் படையினர் எதிர்பாராத விதமாக மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் சிவா கடாபி** [வீரையா சிவகுமார் - முள்ளி ஒழுங்கை, அரியாலை கிழக்கு - யாழ்.]

யாழ் - சாவகச்சேரி, கைதடிப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**சி. தெய்வேந்திரபாலன்-மெண்டிஸ்** (கைதடி மேற்கு, சாவகச்சேரி - யாழ்)

மன்னார் - வங்காலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழினைஞன்.

1991 ஆம் ஆண்டு மட்டு - குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கௌதீபன்** [செல்வராசா சாந்தன் - பெரிய ஊறணி- மட்டு.]

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அரி** [இரத்தினசபாபதி கிருபாகரன் - தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லை.]

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பிரதாப்** [காசி பரமசிவன் - இல. 10, ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி]

1992 ஆம் ஆண்டு மட்டு - பன்சேனை, நல்லதண்ணீரோடை ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - தாழங்குடா, பண்டாரியாவெளிப் பகுதிகளைச் சேர்ந்த இருவர் உட்பட 4 தமிழர்கள்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/5958]

## திருமண நன்றி நவிலல்

03-02-93 இல் நிகழ்ந்த எமது திருமணவைபவத்தில் கலந்து கொண்டு எமக்கு ஆசீர்வாதம் வழங்கியும், அன்பளிப்புக்கள் தந்தும் மகிழ்வித்த உறவினர்கள், நண்பர்கள், கலைஞர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தனித்தனியே நன்றிகள் செலுத்த முடியாமைக்கு மன்னிக்கவும்.

இப்படிக்கு
அன்புடன்

தெட்சணாமூர்த்தி, உதயசங்கர் தம்பதிகள்.
(4244)


## திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஆங்கிரச ஹூ தைத்திங்கள் 28 ஆம் திகதி (10 - 02 - 93) புதன்கிழமை காலை 8.30 முதல் 10.00 மணிவரையில் வரும் மீனலக்கின சுபவேளையில்.

**விஷ்ணுகௌரி குறோசரி**

★ VISHNU GOWRI GROCERY ★

(180, கோயில் வீதி, யாழ்ப்பாணம்)

என்னும் வர்த்தக ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அனைவரையும் சமுகந்தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

திருமதி அமுதம்மா
திருநாவுக்கரசு
"கிருஷ்ணகிரி"
இராசவீதி,
திருநெல்வேலி.

திரு. திருமதி பூலோகராசா விஷ்ணுதாசன்
திருமதி இரவியம் பூலோகராசா
180 (90) கோயில் வீதி, (கைலாச
பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

[4246]

# சிங்கள இராணுவத்தின் அரக்கத்தனத்தால்

# பொன்விளையும் பூமி பொலிவிழந்தது

முல்லைத்தீவு மாவட்டம் ஒரு வளரும் மாவட்டம். வவுனியா மாவட்டத்துடன் இணைந்திருந்த இந்த மாவட்டம் 1987ஆம் ஆண்டளவில் தனிமாவட்டமானது. வன்னி மாவட்டங்களில் இந்த மாவட்டமே வளர்ச்சி குன்றியதும், வயதில் குறைந்ததுமான ஒரு மாவட்டம். இந்த மாவட்ட மக்கள் விவசாயத்தையும் மீன் பிடிப்பதையுமே தமது சுய தொழிலாகக் கொண்டவர்கள் அரச உத்தியோகம் செய்பவர்கள் விரல் மடித்து கணக்கிடக் கூடியவர்களே இருக்கின்றனர் எனலாம்.

இந்த மாவட்டத்தின் கண்களாக முத்தையன்கட்டு, வவுனிக்குளம் ஆகிய இரு அணைக்கட்டுகள் இருக்கின்றன இந்த இரண்டு ஜீவ ஊற்றுக்களைப் பயன்படுத்தி முன்னைய காலங்களில் நெல் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டு, விளைகின்ற நெல் இந்த மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்து மற்றைய மாவட்டங்களுக்கும் வழங்கி வந்தது. கடல் வளமும் அப்படித்தான். கடலில் பெறப்படும் மீன்வகைகள், இறால் போன்றவற்றை வடமாகாணத்திற்கு பயன்படுத்தி மிகுதியானவை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். இந்த இரண்டு தொழிற்பாடுகளாலும் இந்த மாவட்டத்தில் ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது குடும்ப வாழ்வை வளம்படுத்தினர். ஆனால் இன்று அரசின் பொருளாதார அழிவு, இராணுவத்தினரின் கெடுபிடி நிலைகளால் இப்பகுதி மக்கள் தமது சுயதொழிலை இழந்து அபாயகரமான ஒரு இருண்ட வாழ்வில் மூழ்கி வருகின்றனர்.

இந்த மாவட்டம் நிறைந்த வளங்களைக் கொண்டது. தேன்வளம், மீன்வளம், கடல் வளம், பால்வளம், நெய்வளம் தெங்குவளம், தானியவளம், மிருகவளம், பழவளம், போன்ற பல வளங்களைக் கொண்டு இந்த மாவட்டத்தை பெருகூட்டிக் கொண்டிருந்தவேளையில் அங்கே ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் சகல வளங்களும் அழிந்து பொசிந்து போகின்ற நிலையில இருக்கின்றன அப்பகுதி மக்களும் ஒரு நேரமாவது சத்துள்ள உணவைப் பெற்றுக் கொள்ள முடியாமல் அழிந்து இறந்து போகின்ற ஒரு அபாயகரமான நிலையிலே இருக்கின்றனர்.

இந்த மாவட்டம் நீண்ட விஸ்திரணங்களைக் கொண்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைப்பட்டினமாக விளங்குவது முல்லைத்தீவு. முல்லைத்தீவின் பிரதான வாயில்களாக பரந்தன், மாங்குளம், புளியங்குளம் வீதிகள் அமைந்திருக்கின்றன. இந்த மாவட்டம் முல்லைத்தீவின் தெற்கே ஒட்டுசுட்டான் மாங்குளம், துணுக்காய், வவுனிக்குளம், நட்டாங்கண்டல், தென்னியங்குளம் ஆகியவையும், கிழக்கே அலம்பில், கொக்குளாய், நாயாறு மற்றும் பகுதிகளையும் மேற்கே புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, உடையார்கட்டு, தருமபுரம் பகுதி வரைக்கும், மற்றும் நெடுங்கேணி, முருகண்டி பகுதிகளும் இம்மாவட்டத்தில் இணைந்திருக்கின்றன- முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், பாண்டியன் குளம், துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

பல வழிகளாலும் இம்மாவட்டம் படிப்படியாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த வேளையில் அங்கே பலதடவைகள் வெவ்வேறு சம்பவங்களில் சிறிலங்கா அரசின் அடாவடிய நடவடிக்கைகள், பொருளாதார அழிப்பு நடவடிக்கைகள் விஸ்வரூபமெடுத்ததில் இம்மாவட்டத்தில் கடைகள், அலுவலகக்கட்டடங்கள் ஆலயங்கள், வீடுகள், தனியார் கட்டடங்கள், மீனவ வாடிகள், மீனவபடகுகள் மேலும்வலைகள், மீன்பிடி இயந்திரங்கள், உத்தியோகத்தர் விடுதிகள், பாடசாலைக் கட்டடங்கள், முல்லைத்தீவு பிரதான ஆஸ்பத்திரி ஆகியவை குண்டுகள் வீசியும், ஷெல் தாக்குதலாலும், தகர்த்தும் நிர்மூலமாக்கப் பட்டன.

இதுமட்டுமல்ல முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நிர்மூலமாக அப்பகுதியில் இருந்த பல ஆயிரக்கணக்கான மக்களை 24 மணிநேரத்திற்குள் வெளியேறுமாறு அவசர பணிப்பை விடுத்தது இதனால் பீதியுற்ற மக்கள் நெல் மற்றும் விளைந்த சிறுதானியச் செய்கைகள் மற்றும் கால்நடைகள் உடைமைகளை விட்டு வெளியேறினர் அவர்கள் இன்னமும் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியவில்லை அங்கே ஏற்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகளால் இருபத்தைந்து குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன ஐந்து வர்த்தக நிலையங்கள் இரண்டு அலுவலகங்கள் இருபத்தைந்துமீனவ வாடிகள் ஏழு பாடசாலை கட்டடங்கள் மற்றும் வலைகள் வள்ளங்கள் இயந்திரங்களும் அழிந்து போயின. கொக்குளாயில் இருந்து மீள முடியாமல் முல்லைத்தீவில் அகதிகளாக இருந்து வந்த மக்கள் முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் மீண்டும் புதுக்குடியிருப்பு விசுவமடு போன்ற இடங்களுக்கு அகதிகளாக குடிபெயர்ந்தனர்.

1990 ஆம் ஆண்டு மாசிதொடர் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது வர்த்தக நிலையங்கள் இருபத்தைந்து, பத்து அலுவலகக் கட்டடங்கள் இரண்டு ஆலயக்கட்டடங்கள் பத்து விடுதிகள் பதினைந்து குடியிருப்புகள் தனியார் கட்டடங்கள் ஐந்து ஆகியன அழிக்கப்பட்ட. இப்பகுதிக்கட்டடங்கள் மீண்டும் செயல்பட முடியாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன மாங்குளம் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு மேலும் விஸ்தரிக்கப்பட்ட போது முகாமைச்சுற்றியிருந்த நிலப்பரப்புக்களை இராணுவம் சுவீகரித்தது அதன்போது இருபதைந்து குடியிருப்புக்கள் இடித்து அழித்து நொருக்கப்பட்டன இதே வேளைப்பகுதியில் துணுக்காயில் ஏற்பட்ட தாக்குதல் ஒன்றின் போது சில வீடுகள் சேதமடைந்தன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலான இராணுவநடவடிக்கையின் போது முல்லைத்தீவு நகரப்பகுதியை ஆக்கிரமித்தஇராணுவத்தினர் அப்பகுதியில் நூறு வர்த்தக நிலையங்களையும், இருபத்தைந்து அலுவலகக் கட்டடங்களையும் இருநூற்றி இருபது வீட்டுக் கட்டடங்களையும் இருபத்தைந்து தனியார் கட்டடங்களையும், எழுபத்தைந்து மீனவ வாடிகளையும், எண்பத்தைந்து விடுதிகளையும், ஏழு பாடசாலைக் கட்டடங்களையும், வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் உட்பட மேலும் சில ஆலயக் கட்டடங்களையும், முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலைக் கட்டடம், மருந்துவகைகள், படுக்கை கட்டில்கள் மற்றும் முக்கிய உபகரணங்கள் பலவும், பட்டு...

## முல்லை மாவட்டத்தின் துயரம்

...க்கிய வீடுகளில் இருந்து விலை மதிப்பான ரீவிக்கள், றேடியோக்கள், குளிர்சாதனப் பெட்டிகள், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், மற்றும் வீட்டின் கதவுகள், யன்னல்கள், கூரைத் தகடுகள், ஓடுகள் போன்றவற்றை தம்வசப்படுத்தி அவற்றை பார்சல்களாக்கி இராணுவ அதிகாரிகளின் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. எஞ்சியபான வீடுகளை தமது மறைவிடங்களாகவும், பதுங்கு குழிகளாகவும் மாற்றியுள்ளனர். இராணுவ நடவடிக்கையினால் இம்மாவட்டத்திற்கு பல கோடிக்கணக்கிலான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முல்லைத்தீவில் இராணுவத்தினர் இன்னமும் நிலைகொண்டிருப்பதனால் ஏற்பட்ட சேதவிபர மதிப்பீடு பூரணமாக பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இம் மாவட்டத்தில் நான்கு கிராமங்கள் வெவ்வேறு இராணுவ நடவடிக்கையின் போது தாக்குதலுக்கு இலக்கானது. 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் பிரதேசம் திட்டமிட்டு அழிக்கப்பட்டது.

அவ்வழிப்பு நடவடிக்கையின் போது அங்கே பத்து வர்த்தக நிலையங்கள். உத்தியோகத்தர் விடுதிகள் ஐந்து, அலுவலகக் கட்டடம் மூன்று, பத்துக்கு மேற்பட்ட குடியிருப்புகள் மற்றும் ஆலை ஒன்றும் அழிக்கப்பட்டன இன்னமும் அங்கே புனர்நிர்மாணப் பணிகளோ அதற்கு சமமான நடவடிக்கைகளோ எடுக்க அரசு தவறிவிட்டது. இதனையடுத்து அங்கே இயங்கி வந்த அலுவலகங்கள் கிராமப்பகுதிகளில் இயங்கி வருகிறது இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் மீளக் குடியமர முடியவில்லை.

1984 ஆம் ஆண்டளவில் கொக்குளாயிலே சிறிலங்கா இராணுவம் திட்டமிட்ட நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து கள், வலைகள் போன்றவைகளும் நிர்மூலமாக்கப்பட்டன.

முல்லைத்தீவை மையமாக வைத்து அமைந்துள்ள பல கிராமப் பகுதிகளையும் இராணுவம் தன்பிடிக்குள் சிக்க வைத்துள்ளது முல்லை தீவு. கரைச்சிக் குடியிருப்பு. கள்ளப்பாடு. முள்ளிவாய்க்கால். அலம்பில், கொக்குளாய், கொக்குத்தொடுவாய். நாயாறு போன்ற பகுதிகள் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருப்பதால் தண்ணிமுறிப்பில் ஆயிரத்துக் மேற்பட்ட ஏக்கர் நிலத்தைக் கொண்ட இப்பகுதி கடந்த இரண்டு வருடங்களாக நெல்செய்கையின்றி காடுகளாகவும் தரிசு நிலங்களாகவும் காணப்படுகிறது முத்தையன்கட்டு, வவுனிக்குளம் போன்ற தண்ணிமுறிப்பும் நீர்ப்பாசன வசதி கொண்ட இரண்டு முறை வேளாண்மை செய்கை பண்ணக்கூடிய நிலப்பரப்பாகும். தன் தேவையைப் பூர்த்தி செய்து மற்றைய மாவட்டத்தின் தேவைக்கும் நெல் வழங்கிய இம் மாவட்டம் இன்று மற்றைய மாவட்டங்களில் இருந்து உணவைப் பெற கையேந்தி நிற்கின்றது.

இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள கிராமப்பகுதி மக்கள் நீண்ட காலமாக அகதிகளாகவே இருந்து வருகின்றனர். இவர்களுக்கு சத்துணவு. உரிய மருந்து வகைகள், பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி. நல்ல உடை உறக்கமின்றி கஷ்டநிலையிலேயே வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது இப்பகுதி அகதிகளுக்கு நிறுவனங்களின் உதவிகள் போதாத நிலையால் பலர் பட்டினி சாவிலும் நோயின் பிடியில் சிக்குண்டும் அல்லல்படுகின்றனர். இப்பகுதி மக்கள் தொழில் செய்து வாழ முடியாமல் கடற்படையினர் கடற்தொழிலை தடுத்தனர். இராணுவத்தினர் விவசாயிகளுக்கு எரிபொருள், உரம், கிருமிநாசினி, விதைநெல் போன்றவற்றை அனுப்ப மறுத்து வருவதால் இப்பகுதி மக்கள் மேலும் மேலும் மெலிந்து நலிந்து வருகின்றனர்.

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது பல அலுவலகங்கள் ஸ்தம்பித்தன அவ்வலுவலகங்களில் இருந்து முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட முடியவில்லை. பலகோப்புக்கள் முக்கிய ஆவணங்கள் அழிந்தன. மிஞ்சிய கோப்புக்களும் மழை வெள்ளம் உட்சென்று மீதியானவையும் அழிந்து விட்ட நிலையில் உள்ளன.

ஆனால் இவ் அலுவலகங்கள் புதுக்குடியிருப்பில் பல வசதிகள் அற்ற நிலையில் செயற்படுகின்றன மாங்குளம், முல்லைத்தீவு வங்கிகளில் அடகு வைத்தவர்கள் அடகை மீட்கப் பணம் கட்டியவர்களுக்கு இன்னமும் நகைகள் மீளளிக்கப்படவில்லை. கட்டிய பணமும் திருப்பிச் செலுத்தப்படவில்லை. மாங்குளம் மக்கள் வங்கியில் பலரது நகைகள் அழிந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல கடன்களைப் பெறுவதற்காக உறுதி வீட்டுப்பட்டம் போன்றவற்றைவங்கிக்கு கொடுத்தவர்களுக்கு கடன் வழங்கப்படவில்லை. அதேவேளை அவர்களது முக்கிய ஆவணங்கள் பலவும் எரிந்து விட்டன.

இதன் போது மக்கள் வங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க தவறி வருகிறது. இரண்டு வருடங்கள் ஆகியும் மாங்குளம் மக்கள் வங்கி எதுவித பதிலும் அனுப்பி வைக்காததினால் மக்கள் மத்தியில் விசனம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

சிறிலங்கா இராணுவம் இம் மாவட்டத்தில் தமிழர்களது பாரம்பரியங்கள், பொருளாதாரங்கள், கலை கலாசாரங்களை அழிக்கும் நோக்கிலே திட்டமிட்டு செயற்பட்டு வருவது கண்கூடு. அரசின் கெடுபிடியில் இருந்து தப்பித்துக் கொண்டவை எது வென்று எண்ணிப்பார்த்தால் எதுவுமே மிச்சமில்லை என்று தான் பதில் வருகிறது சாதாரண நிலையின் போது இந்த மாவட்டத்தை அவதானித்தவர்கள் மீண்டும் இப்போது சுற்றிப் பார்த்தால் அதன் வேதனை அவர்களுக்குத்தான் புரியும்

மாங்குளம், ஒட்டுசுட்டான் கிராமப் பகுதிகளை இன்றும் பார்த்தால் மயானமாகவே காணப்படுகிறது. இந்தமாவட்டத்தை பலர் வளர்க்க அணு அணுவாக பாடுபட்ட வேளையில் அரசாங்கம் குண்டுகளை வீசிவீசி இந்த மாவட்டத்தை சின்னாபின்னமாக சிதறி சீர்குலைய வைத்துவிட்டது வன்னியிலே முன்னர் மிருக வேட்டை நடப்பது தான் வழக்கம். ஆனால் இந்திய சிறிலங்காப் படைகள் மனித வேட்டையாடினார்கள்.

**எம். கே. யோகரட்ணம்**

## இளங்கலைஞர் மன்றத்தில் இசைவிழா இன்று ஆரம்பம்

இளங்கலைஞர் மன்றத்தின் பதின்மூன்றாவது இசைவிழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று கன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் மாலை நான்கு மணி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய நிகழ்ச்சியில் மங்கல இசையைத் தொடர்ந்து, இளங்கலைஞர் மன்ற மாணவர்களின் மிருதங்க இசையும், இன்னிசை மற்றும் பண்ணிசை என்பவற்றுடன் சுபாஷினி நடராசா அவர்களின் மாணவிகள் வழங்கும் பரத நாட்டியமும் இடம்பெறவுள்ளது. சங்கீதபாட உதவிக் கல்விப் பணிப்பாளரான எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இன்றைய நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்ளவுள்ளார்.

## வடமராட்சிப் பகுதியில் பண்டித வகுப்புகள் ஆரம்பம்

[நெல்லியடி]

வடமராட்சிக் கல்விக்கோட்டத்தில் இலவச பாலபண்டித வகுப்புகள் பா வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் கல்வி மேம்பாட்டுக் கழகத்தினதும், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினதும் ஆதரவுடன் நடாத்தப்படவுள்ளது.

இப் பாலபண்டித வகுப்புகளில் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் தமிழ் மொழியில் சித்தியடைந்தவர்களும், கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்களும் ஏனைய பாடசாலை ஆசிரியர்களும் கலந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டப்படுகின்றனர். இவ் வகுப்புகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை பிரதிப்பணிப்பாளர் வடமராட்சிக் கல்விக்கோட்டம் பருத்தித்துறை என்ற முகவரிக்கு இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடமராட்சிக் கோட்டக்கல்விப் பிரதிப்பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை அறிவித்துள்ளார்.

## கிளை திறப்பிற்கு பாராட்டு

செற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கென புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் திறக்கப்பட்டுள்ள கிளையினை குடியிருப்பு மக்கள் பாராட்டி வருகின்றனர். நிவாரண விநியோகத்தின் போது இக் கிளையில் கடமையாற்றும் சங்கப் பணியாளர்கள் இரவு பகல் பாராது மக்களுக்கு பொருட்களை வழங்குவதாகவும் மற்றும் வேறு பொருட்களை மலிவு விலையில் பெறக் கூடியதாக உள்ளதென்றும் மக்கள் கூறுகின்றனர். (22)

## மாணவர்களுக்கு அன்பளிப்பு

[நெல்லியடி]

தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும், இடம் பெயர்ந்த மாணவர்களின் நலன்களை முன்னிட்டு, பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ஜெ நேசன் அடிகளார் பாடசாலையில் வைத்து, பாடசாலை மாணவருக்கு, பென்சில், கொப்பிகளை அன்பளிப்புச் செய்துள்ளார் இவ் வைபவம் கடந்த 4-ம் திகதி இடம்பெற்றது.

## புனரமைப்புக் கூட்டம்

[தெல்லிப்பழை]

பன்னாலை மாதர் கிராம அபிவிருத்திச்சங்க புனரமைப்புக்கூட்டம் வரும் 13 ஆம் திகதி பேணிக்கு இணுவில் மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் உத்தியோகஸ்தர் தெரிவும் செயற்குழு உறுப்பினர் தெரிவும் புதிய யாப்பை சமர்ப்பித்தலும் இடம்பெறவுள்ளன. இக் கிராம சேவையாளர் பகுதிக்குட்பட்ட சகல மாதர்களையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பன்னாலை கிராம சேவையாளர் கேட்டுள்ளார். (சி)

## மலசல கூடம் திருத்தம்

[மானிப்பாய்]

யாழ் நகர மின்சார நிலைய வீதியில் அமைந்து இருந்த மலசல கூட கட்டடத்தின் திருத்த வேலைகள் ஆரம்பித்துள்ளன. இம் மலசல கூடத்துக்கு முன்னால் போடப்பட்டு வியாபாரம் செய்த கடைகளை நிறுத்தி அவ்வியாபாரிகளுக்கு வேறு இடங்களில் இடம் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ் நவீன சந்தைப் பகுதியில் அமைந்து இருக்கும் மலசல கூட கட்டடத்துக்கு 'மணிக்குரல் விளம்பர சேவை' யாழ். மாநகர சபையின் உதவியோடு இலவச வெளிச்ச வசதியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது [07]

## மஹோற்சவம்

(கொழும்புத்துறை)

திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்.

எதிர்வரும் 15ஆம் திகதி சப்பறமும், 19ஆம் திகதி சப்பறமும், 20ஆம் திகதி தேரும், 21ஆம் திகதி தீர்த்தத் திருவிழாக்களும் இடம்பெறும். [24]

## மாணவர் உணவுமுத்திரைக்கு பொருள்கள் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை மாணவர்களுக்கான 92 ஐப்பசி மாதத்துக்குரிய உணவு முத்திரைக்கான உணவுப்பொருள் விநியோகம் இன்று தொடக்கம் வழங்கப்படவுள்ளதாக ஊர்காவற்துறை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## விநியோகம்

யாழ்.செயலகத்தினால் விநியோகிக்கப்படும் ஓய்வூதியகாரர்களுக்கான பெப்ரவரி மாதத்திற்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ்ப்பாணம் எழுதுவினைஞர்களால் எழுதப்பட்டுள்ளன என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவை மேற்படி ஓய்வூதியர்களுக்கு எதிர்வரும் 10-ம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். செயலகவட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (பா)

---

## 45-ம் நாள் நினைவு அஞ்சலி



### 2-ம் லெப்டினன்ட் கதிர்

(ஞானகுருபரன் - சுதர்சன்)

தாயின் மடியில் 03-08-1974 — தாயக மண்ணில் 27-12-1992

கதிரென எழுந்து கள ஒளிதந்து
களன்று எதிரியின் கர்வம் தகர்த்து
புதிராய் அவர்க்குப் புகட்டினை பாடம்
புலிகள் எழுந்தால் புவியது நடுங்கும்
நாற்பத் தைந்து நற்நாள் நினைவு
சீர்பெற் றோங்கும் திருநாள் இன்று
உன்னை நினைந்து உள்ளம் உருகி
கண்ணில் ஒற்றிக சிந்தோம் ஐய

ஐயனார் வீதி,
சண்டிலிப்பாய்.


இங்ஙனம்
குடும்பத்தினர்

திரு. வ. செல்லத்துரை (பேரன்)

(4162)

---

## 1ம் - ஆண்டு நினைவஞ்சலி



தரணியில்:- 7-12-1915

தனிமையில் 20-2-1992

### சரவணமுத்து நாகலிங்கம்பிள்ளை (சாமியார்)

ஓர் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஒரு நாளாயினும் ஓயவில்லை எம் கவலை
பாதகர் கையில் விட்டோம்
பதைக்கின்றோம் இன்று வரை நாம்
உண்கின்றோம் உடுக்கின்றோம்
உலாவுகின்றோம் - ஆயினும்
மனதுக்குள் புண்பட்டு
வாடுகின்றோம் இப்புவியில்.
உங்கள் புனித முகம் காணாது
கோவிலின் பக்தி எங்கே - நீங்கள்
கும்பிடும் வடிவுதன் எங்கே!
ஆலயம் தொழுவீர் மக்காள் - நீங்கள்
அரும்பணி செய்வீர் என்று
கூறிடும் மொழிதான் எங்கே!
குலவிளக்கே நீங்கள் போனதெங்கே!
மாசிலா மனம்தான் எங்கே!
மனைவி, மக்கள், மருகர், பேரருடன்
மகிழ்ந்திருந்த நாள்தான் எங்கே!
கட்டிய தேர்தான் எங்கே!
கழுத்தினில் உத்தராட்சம் எங்கே!
படித்திட்ட திருவாசகம் எங்கே!
பகிர்ந்திட்ட சொற்பொழிவு எங்கே!
பழகிய அந்தணர் சிவாச்சாரியார் எங்கே!
பார்த்திட்ட சிவாலயம் எங்கே!
கூறிடாமல் கூற்றுவன் வந்து - உங்களை
கூட்டிய இடம்தான் எங்கே!
நினைக்க நினைக்க எம்மை
துவண்டிடும் நிலையில் விட்டு
நீங்கள் நீண்ட தூரம் போனதெங்கே!

தங்களின் ஆன்மா சாந்தியடைய நித்தமும் அவன் தாள் வேண்டுகின்றோம்.

நா. தடாதகைப்பிராட்டி (மகள்)
மா. நோ. சி. நிலையம்
யாழ்ப்பாணம்.

(4243)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1926 — 04 — 22

மறைவு: 1992 — 01 — 22

### மூத்ததம்பி சதாசிவம்

ஆண்டு ஒன்று போனதுதான் — ஆனாலும்
ஆறாய் பெருகும் கண்ணீர்
வற்றவில்லை; நெஞ்சின் துயர் இன்னும்
தீரவில்லை; வையத்தில் நாம் வாழும்வரை
மறையப் போவதில்லை உங்கள் நினைவு.

"டேர்கிரி",
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

– மனைவி, பிள்ளைகள்

(4237)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 6 — 1920

மறைவு: 19 — 2 — 1992

அமரர்

### இராசையா செல்வராசா

திதி: 9 - 2 - 1993

ஆண்டொன்று போனதே அழுகையுடனே
மாண்பொன்று பொலிய வாழ்ந்த நினைவுடன்
ஊண், உறை, உயர் வாழ்வு தந்த நீவிர்
காணிபரியராய் காலத்தைக் கடந்ததேனோ?
நெஞ்சில் துயரும், நினைவில் பசுமையும் கொண்டு
என்றும் உம் நினைவால் வாடும்,

"சுபசதனம்"
சம்பியன் லேன்,
கொக்குவில்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/5955)

## சிந்தனைக்கு

நாடுகள் படைக்கப்படுவதும் இல்லை; ஓட்டுப் போட்டு உருவாக்கப்படுவதும் இல்லை; பல நூற்றாண்டுகளாக படும் வேதனையின் வாயிலாகப், படிப்படியாக வளர்ந்து வலுப்பெறுபவை அவை.

— ஜான் மேஸ்ஃபீல்ட்

ஈழநாதம்

81, மஹேந்திராவீதி, யாழ்ப்பாணம் 09-02-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 023 - 2389 நிர்வாகபீடம் 2028
க. பெ. எண் - 05

# அரசிடம் எதுவும் இல்லை

ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற சிறிலங்கா ஜனாதிபதி பதவி ஏற்று நான்காவது ஆண்டு நிறைவு விழா வைபவத்திலும் சரி, இம்மாதம் இடம் பெற்ற சிறிலங்காவின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலும் சரி, இனப்பிரச்சினையின் தீர்வு குறித்து திரு. பிரேமதாசா விசேட அறிவிப்புக்கள் எதையும் விடுவார் என எதிர்பார்த்த பலர் ஏமாற்றமே அடைந்தனர் என்றால் மிகையில்லை.

பதவி ஏற்பு வைபவத்தில் பேசிய பிரேமதாசா வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தெரிவுக்குழுவின் அறிக்கைக்காக ஆவலுடன் காத்திருப்பதாகத் தெரிவித்தார். இதேவேளை, சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பேசும்போது இனப்பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு காணப்பட்டு விடும் என்றார்.

அதாவது இனப்பிரச்சினைத்தீர்வு குறித்து அரசாங்கத்திடம் திட்டம் எதுவுமில்லை, ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டபோது கூறியதையே தற்பொழுதும பிரேமதாசா மீண்டும் கூறி உள்ளார். ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டபோது அதிலிருந்த நம்பிக்கை தற்போது எவருக்கும் அதன் மீது இல்லை.

தெரிவுக்குழு அமைக்கபபட்டபோது ஓரளவேனும் முன்னேற்றகரமான தீர்வுத் திட்டத்தை இக்குழு முன்வைக்கும் என்றே குறிப்பிட்ட ஒருபகுதியினரால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தெரிவுக்குழு எந்த விதமான முன்னேற்றகரமான திட்டம் எதையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

பல கட்சிகள், பல அமைப்புக்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் பல தீர்வுத் திட்டங்களை முன்வைத்தபோதும் அவற்றைத் தெரிவுக் குழுவில் இருந்தவர்கள் கருத்திற் கொண்டதாகத் தெரியவிலலை. ஆனால் தனி நபராக சிறினிவாசன் முன்வைத்த ஓர் திட்டத்தைப் பாராளுமன்றத் தெரிவுக் குழு பற்றிப் பிடித்துள்ளதாகத் தெரிகின்றது.

இதேவேளை தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டம் இனபபிரச்சினைக்குத் தீர்வு காணாது என இப்பொழுது தமிழர்களினால் தெளிவாக உணர்த்தப்பட்டுளளது. கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் மட்டத்திலேயே தெரிவுக் குழுவின் பரிசீலனையில் உள்ள தீர்வுத் திட்டம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இவற்றையும் தாண்டி பாராளுமன்றத் தெரிவுக்குழு செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதி

# தலைமை பதவியிலிருந்து ராவ் விலக வேண்டும்

## கட்சி அதிருப்தியாளர் கோரிக்கை

[டில்லி]

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தமது கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என ஆளும் கட்சியின் அதிருப்தியாளர்கள் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டின் ஸ்திரத் தன்மையைக் கெடுக்கும் இந்துமத அடிப்படை வாதிகளுக்கு எதிராக திறமையுடன் நடவடிக்கை எடுக்கும் ஒருவரிடம் நரசிம்மராவ் கட்சித் தலைமைப் பதவியை ஒப்படைக்க வேண்டும் என்றும் இன்று நடைபெறவிருக்கும் காங்கிரஸ் கட்சிச் செயல் கமிட்டிக் கூட்டத்தில் தமது ராஜினாமாவை நரசிம்மராவ் அறிவிப்பார் எனத் தாம் நம்புவதாகவும் காங்கிரஸ் கட்சியின் அதிருப்தியாளர்களின் அறிவிப்பாளர் வி. பி. மௌரியா செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆனால் அதிருப்தியாளர்களின் இந்தக் கோரிக்கையை நரசிம்மராவின் ஆதரவாளர்கள் நிராகரித்திருப்பதோடு நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியைத் தொடருவார் எனவும் கூறியுள்ளனர்.

இதேவேளை மனிதவளத் துறை அமைச்சர் அர்ஜுன்சிங் தலைமையில் காங்கிரஸ் கட்சியின் அதிருப்தியாளர்கள் பிரதமர் நரசிம்மராவிற்கு எதிராக செயற்படுவதாக கூறப்படுகிறது. இதற்கிடையில் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது குறித்து ஆராய ஆளும் கட்சி நியமனம் செய்திருக்கும் அமைச்சரவைக்குழுவிலிருந்து அர்ஜுன் சிங் விலகியதற்கு எதிராக பிரதமர் நரசிம்மராவ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

# பிரிதிவி பரீட்சிப்பு

தரையிலிருந்து தரைக்குபாயும் 'பிரிதிவி'யை இந்தியா பத்தாவது தடவையாக பரிசோதித்து வெற்றி கண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

15 கிலோமீற்றர் தூரம் பாயும் வலிமை கொண்ட இந்த ஏவுகணை ஒரிசா மாநிலத்தில் வைத்து சோதனையிடப்பட்டது. இவ்வருடம்முதல் இந்த ஏவுகணையை இந்திய இராணுவத்திற்கு வழங்கவும் அதிகளவில் இந்த ரக ஏவுகணையை உற்பத்தி செய்யவும் இந்தியா தீர்மானித்துள்ளது.

# பம்பாயில் மீண்டும் கலவரங்கள்

## ரயில்கள், கடைகளுக்கு கல்வீச்சு

இந்தியாவின் பம்பாய் நகரில் இந்து - முஸ்லிம் மக்களுக்கு இடையேயான கலவரங்கள் நேற்று முன்தினம் மீண்டும் மூண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிவசேனை அமைப்பைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் இந்துக்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டும் விதத்தில் பொதுக் கூட்டங்களில் பேசினார் என்ற குற்றச் சாட்டின் கீழ் பொலிசாரால் கைது செய்யப்பட்டதை அடுத்து இக்கலவரங்கள் மூண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிவசேனை அமைப்பைச் சேர்ந்த ஆதரவாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டதோடு, ரயில்கள் மற்றும் கடைகள் மீது கல்வீச்சு நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதேவேளை பம்பாய் புறநகர்ப் பகுதியில் ரயில் ஒன்றில் வெடிகுண்டுகளும் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.

# பொஸ்னியாவிற்கு உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்

## ஐ.நா. செயலர் அறிவிப்பு

பொஸ்னியாவிற்கு மனிதாபிமான உதவிப் பணிகள் தொடரும் என்று ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளர் பூட்டிரஸ் பூட்டஸ் காலி கூறியுள்ளார். கடந்தசனியன்றுஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண உதவிப் பொருள்களை ஏற்றிச் சென்றஜேர்மனியின் விமானம் சேர்பிய படைகளால் தாக்கப்பட்ட பின்னர் மனிதாபிமான உதவிப்பணிகளைத் தொடர்வது பாதிக்கப்பட்டிருந்தமைதெரிந்ததே. எனினும் தற்போது சேர்பிய பகுதிகளுக்கு பதிலாக குறோசிய பகுதிகளிலிருந்தே இப்பணிகள் தொடரப்படும் எனவும் தெரியவருகிறது.

காபூல் தூதுவரகத்தில்

# பணியாளர்களைக் குறைக்க பாகிஸ்தான் முடிவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகரமான காபூலில் இருக்கும் பாகிஸ்தான் தூதுவரகத்தில் தனது பணியாளர்களைக் குறைத்துக் கொள்ள பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. பாகிஸ்தான் தூதுவரகமும் ராக்கட் தாக்குதலுக்கு இலக்கானதே இம்முடிவு எடுக்கக் காரணமாகும் எனவும் மேலும் தெரியவருகிறது. பாகிஸ்தான் தூதுவரகக் கட்டிடம் பலத்த சேதம் அடைந்துள்ள போதும் எவரும் காயமடையவில்லை எனவும் தெரிய வருகின்றது.

# ஈராக்கின் போக்கில் மாற்றம் பென்டகன் அதிகாரிகள் கருத்து

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் பதவியிலிருந்து ஜோர்ஜ் புஷ் விலகிய ... எதுவும் நேரவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். வாஷிங்டனில் இராணுவத்

பாதுகாப்பு சபை விரிவாக்கம்

# அமெரிக்காவின் யோசனைக்கு பிரிட்டன் பிரான்ஸ் எதிர்ப்பு

[லண்டன்]

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென அமெரிக்கா தெரிவித்த யோசனைக்கு பிரிட்டனும், பிரான்சும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

அத்துடன் ஐ. நா.வுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை அமெரிக்கா செலுத்தாமலிருப்பதற்கும் அவை கண்டனம் தெரிவித்துள்ளன.

அமெரிக்க அதிபராகப் பதவியேற்றிருக்கும் பில் கிளிண்டன் பாதுகாப்புசபை மேலும் விரிவாக்கப்பட வேண்டுமெனவும், ஜேர்மனி ஜப்பான் போன்ற நிரந்தர உறுப்பு நாடுகளாக சேர்க்கப்பட வேண்டுமெனவும் யோசனை கூறியிருந்தது தெரிந்ததே.

ஆனால் பிரிட்டனின் றோயல் சர்வதேசக் கழகத்தில் உரையாற்றிய பிரிட்டன் வெளிநாட்டமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் கூறுகையில், பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் செய்யப்படலாம் என ஏற்றுக்கொண்ட போதும் அது மிகவும் சிக்கலான விடயம் என்றும், நீண்டகாலம் விவாதிக்க வேண்டியதும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் அதிகமான அளவில் சர்வதேசப் பொறுப்பை சுமந்து கொள்வதாக கூறும் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபைக்கு 400கோடி டாலர் களவரை பாக்கியாக செலுத்த வேண்டியிருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

# தமிழகத்தில் எரிவாயுவில் இயங்கும் 100 பஸ்கள்

(சென்னை)

எரிவாயுவை பயன்படுத்தி இயக்கப்படும் பஸ்கள் இந்த ஆண்டின் இறுதிக்குள் நூறாக அதிகரிக்கப்படும் என்று தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் செங்கோட்டையன் கூறியுள்ளார்.

சென்னையில் பல்வேறு நிறுவனங்கள் சார்பில் எண்ணெய் சிக்கனவார விழா நடந்தது. சிக்கனத்தை கடைப்பிடிப்பதில் தமிழகம் முன்னணி வகிப்பதாகவும், நரிமணம் பகுதியிலிருந்து கிடைக்கும் எரிவாயு மூலம் இப்போது பத்து பஸ்கள் இயக்கப்படுவதாகவும், ஆண்டு இறுதிக்கு முன்பாக இது நூறாக உயர்த்தப்படுமெனவும் குறிப்பிட்டார். அத்துடன் தற்போது நான்கு பஸ்கள் பற்றி

எதையும் விடுவார் என எதிர்பார்த்த பலர் ஏமாற்றமே அடைந்தனர் என்றால் மிகையில்லை.

பதவி ஏற்பு வைபவத்தில் பேசிய பிரேமதாசா வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தெரிவுக்குழுவின் அறிக்கைக்காக ஆவலுடன் காத்திருப்பதாகத் தெரிவித்தார். இதேவேளை, சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பேசும்போது இனப்பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு காணப்பட்டு விடும் என்றார்.

அதாவது இனப்பிரச்சினைத்தீர்வு குறித்து அரசாங்கத்திடம் திட்டம் எதுவுமில்லை, ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டபோது கூறியதையே தற்பொழுதும பிரேமதாசா மீண்டும் கூறி உள்ளார். ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டபோது அதிலிருந்த நம்பிக்கை தற்போது எவருக்கும் அதன் மீது இல்லை.

தெரிவுக்குழு அமைக்கபபட்டபோது ஓரளவேனும் முன்னேற்றகரமான தீர்வுத் திட்டத்தை இக்குழு முன்வைக்கும் என்றே குறிப்பிட்ட ஒருபகுதியினரால் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தெரிவுக்குழு எந்த விதமான முன்னேற்றகரமான திட்டம் எதையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

பல கட்சிகள், பல அமைப்புக்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் பல தீர்வுத் திட்டங்களை முன்வைத்தபோதும் அவற்றைத் தெரிவுக் குழுவில் இருந்தவர்கள் கருத்திற் கொண்டதாகத் தெரியவிலலை. ஆனால் தனி நபராக சிறினிவாசன் முன்வைத்த ஓர் திட்டத்தைப் பாராளுமன்றத் தெரிவுக் குழு பற்றிப் பிடித்துள்ளதாகத் தெரிகின்றது.

இதுதவேளை தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டம் இனபபிரச்சினைக்குத் தீர்வு காணாது என இப்பொழுது தமிழர்களினால் தெளிவாக உணர்த்தப்பட்டுளளது. கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் மட்டத்திலேயே தெரிவுக் குழுவின் பரிசீலனையில் உள்ள தீர்வுத் திட்டம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இவற்றையும் தாண்டி பாராளுமன்றத் தெரிவுக்குழு செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதி பாராளுமனறத் தெரிவுக் குழுவின் தீர்வுத் திட்டம் பற்றி நம்பிக்கையுடன் இருபபதாகவும், தீர்வுத் திட்டம் வெளி வந்ததும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்து வருகின்றார்.

அதாவது தமிழர்களின் எத்தரப்பும் ஏற்காத ஓர் தீர்வுத் திட்டத்தை தெரிவுக்குழுவின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக பிரேமதாசா முன்வைக்க முறபடுவதுபோல் தெரிகின்றது இதன் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசாங்கம் பெருமுயற்சி எடுத்து வருவதாகக் கூறி உலக நாடுகளின் கண்ணில் மண்ணைத் தூவப் பார்க்கின்றது. இதேவேளை, இத்தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரிப்பின் அதனையே காரணம் காட்டி புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை முடுக்கி விடவும் அரசாங்கம முனையலாம். இதற்கு ஏற்றாற் போலவே இராணுவத்தையும் அரசு பலப்படுத்தி வருவதுபோல் தெரிகிறது.

அதாவது, இனப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய எந்தவித அரசியல் தீர்வுத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. ஆனால், ஒப்பிற்கு தமிழர் தரப்பு ஏற்காத ஓர் தீர்வுத் திட்டத்தை அறிவித்து விட்டு இராணுவ நடவடிக்கையைத் தொடரவே அரசாங்கம் வரும்புகின்றது. ஆனால் சிங்கள அரசாங்கம் எண்ணுவது போன்று இராணுவ வெற்றி என்பது சாத்தியப்படக் கூடியதோ அன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடப் போவதோ இல்லை!

---

ஆனால் அதிருப்தியாளர்களின் இந்தக் கோரிக்கையை நரசிம்மராவின் ஆதரவாளர்கள் நிராகரித்திருப்பதோடு நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியைத் தொடருவார் எனவும் கூறியுள்

ஒருவர் இந்துக்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டும் விதத்தில் பொதுக் கூட்டங்களில் பேசினார் என்ற குற்றச் சாட்டின் கீழ் பொலிசாரால் கைது செய்யப்பட்டமை 5 யடுத்து இக்கலவரங்கள் மூண்

# பொஸ்னியாவிற்கு உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்

## -ஐ.நா. செயலர் அறிவிப்பு

பொஸ்னியாவிற்கு மனிதாபிமான உதவிப் பணிகள் தொடரும் என்று ஐக்கியநாடுகள் பொதுச் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டஸ் காலி கூறியுள்ளார். கடந்த சனியன்று ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண உதவிப் பொருள்களை ஏற்றிச் சென்ற ஜேர்மனியின் விமானம் சேர்பிய படைகளால் தாக்கப்பட்ட பின்னர் மனிதாபிமான உதவிப்பணிகளைத் தொடர்வது பாதிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. எனினும் தற்போது சேர்பிய பகுதிகளுக்கு பதிலாக குறோஷிய பகுதிகளிலிருந்தே இப்பணிகள் தொடரப்படும் எனவும் தெரியவருகிறது.

காபூல் தூதுவரகத்தில்

# பணியாளர்களைக் குறைக்க பாகிஸ்தான் முடிவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகரமான காபூலில் இருக்கும் பாகிஸ்தான் தூதுவரகத்தில் தனது பணியாளர்களைக் குறைத்துக் கொள்ள பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. பாகிஸ்தான் தூதுவரகமும் ராக்கட் தாக்குதலுக்கு இலக்கானதே இம் முடிவு எடுக்கக் காரணமாகும் எனவும் மேலும் தெரியவருகிறது. பாகிஸ்தான் தூதுவரகக் கட்டிடம் பலத்த சேதம் அடைந்துள்ள போதும் எவரும் காயமடையவில்லை எனவும் தெரிய வருகின்றது.

# ஈராக்கின் போக்கில் மாற்றம் பென்டகன் அதிகாரிகள் கருத்து

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் பதவியிலிருந்து ஜோர்ஜ் புஷ் விலகிய பின்னர் ஈராக்கின் போக்கில் வரவேற்கத்தக்க மாறுதல்கள் தெரிய வருவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடந்த பத்து நாட்களாக ஈராக்கின் தென்பகுதியில் இருக்கும் விமானப் பறப்பிற்கு தடைவிதிக்கப்பட்ட பிரதேசத்தில் விரும்பத்தகாத சம்பவம் எதுவும் நேரவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். வாஷிங்டனில் இராணுவத் தலைமையகமான பென்டகன் இதுபற்றி மேலும் கூறுகையில் ஈராக்கின் போக்கில் மாற்றம் இருப்பதாகவும், ஈராக்கின் ராடர் சாதனங்கள் அமெரிக்க விமானங்களை குறிவைப்பது தவிர்க்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இஸ்ரேலுக்கு எதிராக தீர்மானம்

# ஐ. நாவில் நிறைவேற்ற பிரிட்டன் பிரான்ஸ் முயற்சி

(லண்டன்)

இஸ்ரேலினால் நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான நகல் வடிவத்தை தயாரிப்பதில் பிரிட்டனும், பிரான்சும் ஈடுபட்டுள்ளன.

நாடு கடத்தப்பட்ட எல்லாப் பாலஸ்தீனியர்களையும் நாடு திரும்புவதற்கு இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இத் தீர்மானம் இருக்கும் என்று கூறப்படுகிறது. எனினும் அரபு நாடுகள் விரும்புவது போல் இஸ்ரேலுக்கு எதிரான பொருளாதாரத் தடை விதிக்க இத் தீர்மானம் வகை செய்யாது எனவும் தெரிய வருகிறது.

இதே வேளை நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியரில் ஒரு பகுதியை நாடு திரும்ப அனுமதிக்கும் இஸ்ரேலின் தீர்மானம் ஒரு திருப்புமுனை எனக் கருதும் வாஷிங்டன், மேற்காசிய சமாதானப் பேச்சுக்களை உடனடியாக தொடங்க வேண்டும் எனவும் விருப்பம் தெரிவித்துள்ளது. ஆனால் இஸ்ரேலின் அறிவிப்பு பாதுகாப்புச்சபையின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்று ஐ. நா.வின் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டரீஸ் காலி கூறியுள்ளார்.

---

பாதுகாப்பு சபை விரிவாக்கம்

# அமெரிக்காவின் யோசனைக்கு பிரிட்டன் பிரான்ஸ் எதிர்ப்பு

[லண்டன்]

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென அமெரிக்கா தெரிவித்த யோசனைக்கு பிரிட்டனும், பிரான்சும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

அத்துடன் ஐ. நா.வுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை அமெரிக்கா செலுத்தாமலிருப்பதற்கும் அவை கண்டனம் தெரிவித்துள்ளன.

அமெரிக்க அதிபராகப் பதவியேற்றிருக்கும் பில் கிளிண்டன் பாதுகாப்புசபை மேலும் விரிவாக்கப்பட வேண்டுமெனவும், ஜேர்மனி ஜப்பான் போன்ற நிரந்தர உறுப்பு நாடுகளாக சேர்க்கப்பட வேண்டுமெனவும் யோசனை கூறியிருந்தது தெரிந்ததே.

ஆனால் பிரிட்டனின் றோயல் சர்வதேசக் கழகத்தில் உரையாற்றிய பிரிட்டன் வெளிநாட்டமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் கூறுகையில், பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் செய்யப்படலாம் என ஏற்றுக் கொண்ட போதும் அது மிகவும் சிக்கலான விடயம் என்றும், நீண்டகாலம் விவாதிக்க வேண்டியதும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் அதிகமான அளவில் சர்வதேசப் பொறுப்பை சுமந்து கொள்வதாக கூறும் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபைக்கு 400கோடி டாலர் கள்வரை பாக்கியாக செலுத்த வேண்டியிருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

# தமிழகத்தில் எரிவாயுவில் இயங்கும் 100 பஸ்கள்

(சென்னை)

எரிவாயுவை பயன்படுத்தி இயக்கப்படும் பஸ்கள் இந்த ஆண்டின் இறுதிக்குள் நூறாக அதிகரிக்கப்படும் என்று தமிழ்நாடு போக்குவரத்து அமைச்சர் செங்கோட்டையன் கூறியுள்ளார்.

சென்னையில் பல்வேறு நிறுவனங்கள் சார்பில் எண்ணெய் சிக்கனவார விழா நடந்தது. அவ்விழாவில் கலந்துகொண்ட தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங் பேசும்போது. இந்தியாவிலேயே எரிபொருள் சிக்கனத்தை கடைப்பிடிப்பதில் தமிழகம் முன்னணி வகிப்பதாகவும். நரிமணம் பகுதியிலிருந்து கிடைக்கும் எரிவாயு மூலம் இப்போது பத்து பஸ்கள் இயக்கப்படுவதாகவும், ஆண்டு இறுதிக்கு முன்பாக இது நூறாக உயர்த்தப்படுமெனவும் குறிப்பிட்டார். அத்துடன் தற்போது நான்கு பஸ்கள் பற்றரி மூலம் இயக்கப்படுகிறது, அதுவும் இருபதாக உயர்த்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தமிழக சட்ட பேரவையிலிருந்து காங்கிரஸார் வெளி நடப்பு

(சென்னை)

தமிழ்நாடு சட்டபேரவையிலிருந்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஒரு பகுதியினர் நேற்று வெளிநடப்பு செய்தனர். பேரவையில் கேள்வி நேரம் முடிவடைந்த பின்னர், காங்கிரஸ்உறுப்பினர் தண்டாயுதபாணி அண்மையில் விழுப்புரத்தில் காந்தி சிலை யொன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர முன்வந்தார்.

ஆனால் சபைத்தலைவர் சேடப்பட்டி முத்தையா இப் பிரச்சினை தமது கவனத்தில் இருப்பதால் ஒருவார காலம் ஒத்திவைத்துப் பின்னர் விவாதிக்கலாம் என்று கூறியதை காங்கிரஸ் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் ஏற்காமல் ஆட்சேபம் தெரிவித்தனர். இவ்வேளையில் குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் ஜெயலலிதா காங்கிரஸ் கட்சியினர் சபையின் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஊறுவிளைவித்தால் சபைத்தலைவர் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடுமையான குரலில் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்க் கட்சியான காங்கிரஸ்கட்சியின் உறுப்பினர்களுக்குமிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து தண்டாயுதபாணி தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் குழுவொன்று சபையிலிருந்து வெளிநடப்பு செய்தது.

தமிழ்நாட்டில் ஆளுங்கட்சியுடன் தோழமை கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் தின கருத்தரங்கு

(தொல்புரம்)

எதிர்வரும் அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளாக விசேட கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி கருத்தரங்கு சுழிபுரம், பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலைய முன்றலில் இன்று மாலை ஆறு மணி அளவில் இடம் பெறவுள்ளது என சங்கானை வட்டவைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் நாளை மாலை ஆறு மணியளவில் தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தோட்டாவை பரீட்சித்தவர் காயம்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிச் தோட்டாவை பரீட்சித்துப் பார்த்தவர் அது வெடித்ததினால் கையில் காயமுற்றார்.

யாழ்ப்பாணம் பிறவுன் வீதியைச் சேர்ந்த கைலாசபிள்ளை உதயச்சந்திரன் வயது 18) என்பவர் வீதியில் கண்டெடுத்த துப்பாக்கித்தோட்டா ஒன்றை கல்லினால் குத்திய போது அதுவெடித்ததில்கையில் பலத்த காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

படையினரிடம்

னும் அரசியல் தலைவர்களுடனும் இது தொடர்பாக நேரடியாகப் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளும் நடத்தினார். ஆனால் இன் வரை இவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்க ராணுவம் பின்னடித்து வருகிறது.

இந்த வாகனங்களில் ஏற்றப்பட்டிருந்த பல கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் அழிந்து நாசமாகியிருப்பதுடன் வாகனங்களின் உதிரிப்பாகங்களும் கழட்டப்பட்ட நிலையில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அங்கு நின்ற சில வாகனங்களை இராணுவத்தினர் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருவதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

# விமான விபத்தில் 131 பேர் பலி

(தெகிரான்)

ஈரானிய விமானம் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 131 பேரும் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிய விமான சேவை நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த விமானம் தெகிரான் பகுதியில் இராணுவ விமானம் ஒன்றுடன் மோதி வானில் வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கப்படுகிறது.

சோவியத்யூனியனால் தயாரிக்கப்பட்ட அந்த விமானத்தில் 119 பயணிகளும் 12 ஊழியர்களும் இருந்தனர்.

இந்த விமானத்துடன் மோதிய இராணுவ விமானமும் வெடித்துச் சிதறியதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்த விமானத்தில் பயணம் செய்தவர்கள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை.

## விவசாய உபகரணங்கள் குமணவில் வந்தன

[வடமராட்சி]

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சமாசத்திற்கு 'குமண' கப்பலில் உணவுப் பொருள்களின் உள்ளடக்கலாக விவசாய உபகரணங்கள் பலவும் எடுத்து வரப்பட்டிருக்கின்றன.

மேற்குறித்த பொருள்கள் சிறிலங்கா இராணுவ கூட்டுப்படை தலைமை அலுவலகத்தினரால் கடந்த ஆறு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இக் கப்பல் மூலம் தற்போது எடுத்துவர முடிந்தது.

விவசாய உபகரணங்களாக 240 நீர் இறைக்கும் இயந்திரங்கள், மண்வெட்டிகள், பூவாளிகள், அலகதின் பைப் வகைகள் மற்றும் பலவும் எடுத்து வரப்பட்டுள்ளன இவை இம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சமாச உப தலைவரும், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவருமான திரு சி கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

மற்றும் இச் சமாசத்திற்கு கால் நடைத் தீன், பால்மா வகைகள், தீப்பெட்டிகள் மற்றும் பொருள்களும் எடுத்து வரப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

[யா]

வடமராட்சி

கடந்த சில தினங்களாக கடலில் கடற்படையினரின் நடவடிக்கைகளும் அட்டகாசங்களும் அதிகரித்து வருவதினால் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை இழந்துள்ளனர். மீனவர்கள் குடும்பங்கள் ஜீவனோபாயத்தைச்செலுத்த முடியாமல் அல்லலுறுகின்றனர். [யோ]

பிரதேச

திரும்பினர்.

நேற்றைய மறியல்போராட்டத்தில் வடமராட்சி வடக்கு -கிழக்கு மீனவர் ஒன்றியங்கள் மற்றும் இருபத்தைந்திற்கு மேற்பட்ட சங்கங்கள், பொதுமக்கள் பலரும் இணைந்திருந்தனர்.

இவர்கள் "பட்டினிச்சாவை நீக்கு" "பொருளாதாரத் தடையை நீக்கு" "மருந்து எரிபொருள் தாராளமாக வழங்கு" "பூநகரி பாதையை திறந்து விடு" "கடல் வலயச் சட்டத்தை நீக்கி இராணுவ கெடுபிடியை தளர்த்து" போன்ற சுலோகங்கள் கொண்ட அட்டைகளைத் தாங்கிய வண்ணம் இம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று பருத்தித்துறை வர்த்தக சங்கமும் பொதுமக்களும் அதனைத் தொடர்ந்து வடமராட்சி தனியார் பேருந்து மற்றும் அமைப்புக்களும் மறியல் போராட்டத்தை தொடரவுள்ளன. [வே]

## ஆதாரம் காட்டிப் பெறவும்

திருநெல்வேலி சிவன் கோவிலுக்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையே பேர்ஸ் ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் திருநெல்வேலியிலுள்ள போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தில் ஆதாரம் தெரிவித்து பெற்றுக் கொள்ளவும்.

* * *

புலவனார் வீதிக்கும் 'வைரவர் கோவிலடி) கல்வியங்காடு சந்தைக்குமிடையில் சொ. தவசோதிலிங்கம் என்பவரால் சங்கிலியொன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

கேரதீவு

நாடுகள் சபை அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளை அடுத்து முக்கியமாகவுள்ள விடயங்களில் மேற்படி பகுதியிலிருந்து படை விலகல், பயணிகளைக் கண்காணிப்பது அல்லது சோதனையிடுவது ஆகியவை முக்கியமாக இடம் பெறுவதாகக் கூறப்படுகின்றது. இது குறித்து இன்னமும் இணக்கம் ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கடற்பாதையூடாக பயணிகளின் போக்கு வரத்து வசதிக்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளின் மேற்பார்வையில் "படகு சேவை" ஒன்றை நடாத்துவதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளனர். எனினும் இதற்கான நடவடிக்கைகள் எதுவும் நேற்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

இவ்வாறானநிலையில் மேற்படி பாதையை பயன்படுத்துவதில் எவ்வாறான நடைமுறைகள் குறித்து தீர்மானிக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குமுன்னர் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து நிலைமைகள் குறித்து நேரடித் தகவல்களை பெற்றுக் கொண்டதன் பின்னரே அவை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது. [சு], [நி]

## 5 வருட சேவையின் பின்பே சுயவிருப்ப இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் ஆசிரியர்களில் பயிற்சிக் காலம் உட்பட ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கே அவர்கள் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏனையோருக்கு எக்காரணம் கொண்டும் சுயவிருப்ப இடமாற்றங்கள் வழங்கப்படமாட்டாது என யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மேலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் வெளிமாவட்ட பாடசாலை ஆசிரியர் எவருக்கும் யாழ். மாவட்டத்தில் தற்காலிக நியமனம் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (பா)

## உடுகம்பொலவை தேடும் 150 இரகசிய பொலிசார்

[கொழும்பு]

தற்பொழுது தலைமறைவாகியுள்ள முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவைத் தேட 150 இரகசியப் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக தலைமறைவாகி இருக்கும் இவர் தற்போது ஐரோப்பிய நாடுகளின் உதவியுடன் சிறிலங்காவிலிருந்து தப்பி ஓடக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் இரகசிய பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

யாழ்.

தாகக் கூறப்படும் மருந்துப் பெட்டி ஒன்று விடுதிப் பிரதமதாதியிடம் ஒப்படைக்கும் போது காணாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றதாக தெரியவருகின்றது.

மேற்படி மருந்து களஞ்சியத்தில் குறைவாக ஒப்படைக்கப்பட்டதா அல்லது வழியில் காணாமல் போனதா என்பது பற்றி இதுவரை அறியப்படவில்லை.

இது தொடர்பாக நிர்வாகம் சம்பந்தப்பட்ட சிற்றூழியரைப் பணம் செலுத்தும் படி பணித்துள்ளது இதனைத் தொடர்ந்து சக ஊழியர்கள் பணம் திரட்டி செலுத்தியதுடன் நிர்வாகத்தின் இந் நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து இனி மேல் கைபொப்பமிட்டே களஞ்சியத்திலிருந்து மருந்துப் பொருள்களை சிற்றூழியர்கள் பொறுப்பேற்க வேண்டும் என நிர்வாகம் பணித்துள்ளது. இதற்கு சிற்றூழியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நிர்வாகம் மேற்படி மருந்து காணாமல் போனது தொடர்பாக ஏற்பட்ட இழப்பீட்டுத்தொகையை பிரதம தாதி, சிற்றூழியர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆகியோரை செலுத்துமாறு பணிப்புரைவிடுத்தது

நிர்வாகத்தின் இத் தீர்ப்பை கடுமையாக ஆட்சேபித்த

எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா இராணுவ முகாம் நிலைகளிலிருந்து தொண்டமானாறு பகுதியை நோக்கி நேற்று முன் தினம் இரவு 9 00 மணியளவில் இராணுவத்தினர் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதிபர்களுக்கு

3-ம் தர பாடசாலை அதிபர்களுக்கு ரூபா 150-00-ம் 1-1-93-ல் இருந்து வழங்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ் அதிகரிக்கப்பட்ட அதிபர் படி மத்திய கல்வி அமைச்சின் இல. அசே/1/37 (11) 18-5-92 ல் வெளிவந்த சுற்றறிக்கையின்படி, வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றறிக்கைக்கு முன்னர் தற்போது தேசிய பாடசாலைகளிலும், 1 ஏ. பி. சி பாடசாலையைச் சேர்ந்த அதிபர்களுக்கு ரூபா 200-00-ம், 2-ம் தர பாடசாலை அதிபர்கள் ரூபா 150-00-ம், 3-ம் தர பாடசாலை அதிபர்கள் ரூபா 100-00-ம் பெற்றுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (17)

காங்கேசன்

உடன்பாடு ஒன்றின்கீழ் குடாநாட்டிற்குள் உணவுப்பொருள்களை எடுத்துவருவது குறித்து சம்பந்தப்பட்ட மூன்று தரப்பினரும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனினும் இப்பாதையூடான வாகனப் போக்கு வரத்துக்கள்

## மரண அறிவித்தல்



வண்ணார்பண்ணை கலட்டி அம்மன் தேவஸ்தானம்
துர்க்காதேவி உற்சவமூர்த்தி பிரதிஷ்டா
மஹாகும்பாபிஷேகம்

உதயசந்திரன் (வயது 18) என்பவர் வீதியில் கண்டெடுத்த துப்பாக்கித்தோட்டா ஒன்றை கல்லினால் குத்திய போது அதுவெடித்ததில் கையில் பலத்த காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

---

## படையினரிடம்

னும் அரசியல் தலைவர்களுடனும் இது தொடர்பாக நேரடியாகப் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளும் நடத்தினார். ஆனால் இன் வரை இவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்க ராணுவம் பின்னடித்து வருகிறது.

இந்த வாகனங்களில் ஏற்றப்பட்டிருந்த பல கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அழிந்து நாசமாகியிருப்பதுடன் வாகனங்களின் உதிரிப்பாகங்களும் கழட்டப்பட்ட நிலையில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அங்கு நின்ற சில வாகனங்களை இராணுவத்தினர் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருவதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

மேற்குறித்த பொருட்கள் சிறிலங்கா இராணுவ கூட்டுப்படை தலைமை அலுவலகத்தினரால் கடந்த ஆறு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இக் கப்பல் மூலம் தற்போது எடுத்துவர முடிந்தது.

விவசாய உபகரணங்களாக 240 நீர் இறைக்கும் இயந்திரங்கள், மண்வெட்டிகள், பூவாளிகள், அலுமினியப் பைப் வகைகள் மற்றும் பலவும் எடுத்து வரப்பட்டுள்ளன இவை இம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனைக்

---

## வடமராட்சி

கடந்த சில தினங்களாக கடலில் கடற்படையினரின் நடவடிக்கைகளும் அட்டகாசங்களும் அதிகரித்து வருவதினால் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை இழந்துள்ளனர். மீனவர்கள் குடும்பங்கள் ஜீவனோபாயத்தைச்செலுத்த முடியாமல் அல்லலுறுகின்றனர். [யோ]

வரப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [யா]

---

## பிரதேச

திரும்பினர்.

நேற்றைய மறியல்போராட்டத்தில் வடமராட்சி வடக்கு-கிழக்கு மீனவர் ஒன்றியங்கள் மற்றும் இருபத்தைந்திற்கு மேற்பட்ட சங்கங்கள், பொது மக்கள் பலரும் இணைந்திருந்தனர்.

இவர்கள் "பட்டினிச் சாவை நீக்கு" "பொருளாதாரத் தடையை நீக்கு" "மருந்து எரிபொருள் தாராளமாக வழங்கு" "பூநகரி பாதையை திறந்து விடு" "கடல் வலயச் சட்டத்தை நீக்கி இராணுவ கெடுபிடியை தளர்த்து" போன்ற சுலோகங்கள் கொண்ட அட்டைகளைத் தாங்கிய வண்ணம் இம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று பருத்தித்துறை வர்த்தக சங்கமும் பொதுமக்களும் இதனைத் தொடர்ந்து வடமராட்சி தனியார் பேரூந்து மற்றும் அமைப்புக்களும் மறியல் போராட்டத்தை தொடரவுள்ளன. [வே]

சோதனைபிடுவது ஆகியவை முக்கியமாக இடம் பெறுவதாகக் கூறப்படுகின்றது. இது குறித்து இன்னமும் இணக்கம் ஏதும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக்கடற் பாதையூடாக பயணிகளின் போக்கு வரத்து வசதிக்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளின் மேற்பார்வையில் "பாதை சேவை" ஒன்றை நடாத்துவதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளனர். எனினும் இதற்கான நடவடிக்கைகள் எதுவும் நேற்றுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

இவ்வாறானநிலையில் மேற்படி பாதையை பயன்படுத்துவதில் எவ்வாறான நடைமுறைகள் குறித்து தீர்மானிக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குமுன்னர் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து நிலைமைகள் குறித்து நேரடித் தகவல்களை பெற்றுக் கொண்டதன் பின்னரே அவை நடைமுறைப் படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது. [க], [நி]

யாழ்.

தாகக் கூறப்படும் மருந்துப் பெட்டி ஒன்று விடுதிப் பிரதம தாதியிடம் ஒப்படைக்கும் போது காணாமல் போய் விட்டதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை நடைபெற்றதாக தெரியவருகின்றது.

மேற்படி மருந்து களஞ்சியத்தில் குறைவாக ஒப்படைக்கப்பட்டதா அல்லது வழியில் காணாமல் போனதா என்பது பற்றி இதுவரை அறியப்படவில்லை.

இது தொடர்பாக நிர்வாகம் சம்பந்தப்பட்ட சிற்றூழியரைப் பணம் செலுத்தும் படி பணித்துள்ளது இதைத் தொடர்ந்து சக ஊழியர்கள் பணம் திரட்டி செலுத்தியதுடன் நிர்வாகத்தின் இந் நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து இனிமேல் கையொப்பமிட்டே களஞ்சியத்திலிருந்து மருந்துப் பொருள்களை சிற்றூழியர்கள் பொறுப்பேற்க வேண்டும் என நிர்வாகம் பணித்துள்ளது. இதற்கு சிற்றூழியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நிர்வாகம் மேற்படி மருந்து காணாமல் போனது தொடர்பாக ஏற்பட்ட இழப்பீட்டுதொகையை பிரதம தாதி, சிற்றூழியர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆகியோரை செலுத்துமாறு பணிப்புரைவிடுத்தது

நிர்வாகத்தின் இத் தீர்ப்பை கடுமையாக ஆட்சேபித்த தாதிகள் வெளிநடப்பு செய்தனர்.

இறுதியாக சிற்றூழியர்கள் கையொப்பமிடாது மருந்துகளை எண்ணி பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், பிரதம விடுதித்தாதியிடம் எண்ணி ஒப்படைக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பலாலி சிறிலங்கா இராணுவ முகாம் நிலைகளிலிருந்து தொண்டமானாறு பகுதியை நோக்கி நேற்று முன் தினம் இரவு 9 00 மணியளவில் இராணுவத்தினர் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

---

## அதிபர்களுக்கு

3-ம் தர பாடசாலை அதிபர்களுக்கு ரூபா 150-00-ம் 1-1-93-ல் இருந்து வழங்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ் அதிகரிக்கப்பட்ட அதிபர் படி மத்திய கல்வி அமைச்சின் இல. அசே/1/37 (11) 18-5-92 ல் வெளிவந்த சுற்றறிக்கையின்படி வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றறிக்கைக்கு முன்னர் தற்போது தேசிய பாடசாலைகளிலும், 1 ஏ. பி, சி பாடசாலையைச் சேர்ந்த அதிபர்களுக்கு ரூபா 200-00-ம், 2-ம் தர பாடசாலை அதிபர்கள் ரூபா 150-00-ம், 3-ம் தர பாடசாலை அதிபர்கள் ரூபா 100-00-ம் பெற்றுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (17)

---

## காங்கேசன்

உடன்பாடு ஒன்றின்கீழ் குடாநாட்டிற்குள் உணவுப்பொருள்களை எடுத்துவருவது குறித்து சம்பந்தப்பட்ட மூன்று தரப்பினரும் ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனினும் இப்பாதையூடான வாகனப் போக்குவரத்துக்கள் தொடர்பாக இன்னமும் முத்தரப்புடனும் பேச்சுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது இவ்விடயம் குறித்து இறுதி முடிவு இதுவரை மேற்கொள்ளபடவில்லை. இம் முடிவு எடுக்கப்பட்டதும் இப்பாதையூடாக உணவுப் பொருள்கள் எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

---


# மரண அறிவித்தல்

பிறப்பு:

9 - 12 - 74

இறப்பு:

2 - 2 - 93



## மனுவேற்பிள்ளை யூட் ஜோசவ்

சிந்திற் பந்தல் இளவாலையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை கூழாவடி கிழக்கில் வசித்தவருமான மனுவேற்பிள்ளை யூட ஜோசவ் அவர்கள் 2 2 93 செவ்வாய்க்கிழமை இரவு கிளாலிப் பகுதியில் அகால மரணமடைந்துவிட்டார் இவர் திரு. அலேசுப்பிள்ளை மனுவேற்பிள்ளை தம்பதிகளின் மகனாவார் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;

F. யோண், கூழாவடி கிழக்கு, ஆனைக்கோட்டை.

அ. மனுவேற்பிள்ளை (தந்தை)

(4247)

---

வண்ணார்பண்ணை கலட்டி அம்மன் தேவஸ்தானம்

துர்க்காதேவி உற்சவமூர்த்தி பிரதிஷ்டா

# மஹாகும்பாபிஷேகம்

காலம்: 11 - 02 - 93 வியாழக்கிழமை

நேரம்: காலை 8.30க்கு மேல் நடைபெறும்

மாலை 4 மணிக்கு துர்க்காதேவிக்கு 1008 தேசிக்காய் விளக்கேற்றப்பட்டு 5 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று தேவி பூந்தண்டிகையில் காட்சி தருவாள்.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 22-02-93 தொடக்கம் தேவிக்கு தொடர்ந்து 15 நாட்கள் சாந்திக மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

## விசேட நிகழ்ச்சி

11-2-93 தொடக்கம் 08-03-93 வரை மாலை 6.30 தொடக்கம் 7.30 வரைவிசேட நிகழ்ச்சியாக கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் அவர்களின் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

குறிப்பு: இதன் முன்னோடி நிகழ்ச்சியாக இன்று 09 - 02 - 93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புதிதாக உருவாக்கப்பட்ட துர்க்காதேவி விக்கிரகம் சிற்பாசாரிய சாலையிலிருந்து [நீராவியடி - யாழ்] நாவலர் வீதி, மனோகரா சந்தி. துட்டாதெரு. நாச்சிமார் கோயில் வீதி, கலட்டி சந்தி வழியாக ஆலயத்தை ஊர்வலமாக வந்தடையும்.

[4248] தேவஸ்தானம்

---

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 08-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8237

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42 1019, 42-7312, 26 673, 28-159, 22-3611, 26-6398, 40-7584, 41-9530, 41-5605, 42-5590, 24-4727, 24-7225, 24-1040, 42 8114, 28-1062, 40-3073, 26-8746, 26-1989, 26-852, 27-5823,

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4323, 27-9779, 26-1602, 24-3071, 27-999, 26-1745, 40-1655, 24-6448, 27-9661, 27-1531, 28-2511, 28-8382, 27-5187, 28-2810, 40-7207, 24-9596, 41-2659, 27-9772, 24-5967, 28-1111

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது